# அரசின் செலவில் 'பாம்பும் ஏணியும்' விளையாட்டு

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 09 இதழ் 70
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21 — 04 — 1992

## 'சண்டே ரைம்ஸ்' சாடுகிறது

(கொழும்பு)
அரசியல்வாதிகளும், இராணுவத்திலுள்ள உயர்மட்ட திகாரிகளும் அரசின் செலவில் 'பாம்பும் ஏணியும்' விளையாட்டு விளையாடுவதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை

(4-ம் பக்கம் பார்க்க)

## பௌத்தகுழுவினர் இன்று புறப்படுவர்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த, பௌத்த மதக் குழு இன்று யாழ்ப்பாணம் புறப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது

இதற்கான சகல ஏற்பாடுகளையும் அரசுத் தரப்பும், செஞ்சிலுவைச் சங்கத்தினரும், புலிகளும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கட்சித் தலைவர்களுடன் பௌத்த குழு பேச்சு

[கொழும்பு]
நாளை யாழ்ப்பாணம் வரவுள்ள பௌத்த பிக்குகள் குழு பல அரசியல் சட்சி தலைவர்களுடன் பேச்சுக்களை நடாத்திவருகிறார்கள்,

இப்பேச்சுக்களை பூரணப்படுத்தும் விதத்திலேயே தங்கள் பயணம் ஒத்திவைக்கப்பட்டதாக பௌத்த குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வரும் பௌத்த குழுவினருக்கு பூரண பாதுகாப்பை தாங்கள் வழங்குவோமென புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தெரிவித்துள்ளனர். [சி]

# தெரிவுக் குழுவின் முடிவுடன் அமைச்சர்தொண்டமான் விரைவில் யாழ். வருவார்

(கொழும்பு)
**அமைச்சர் திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வருவதற்கான துரித முயற்சிகளில் மீண்டும் ஈடுபடவுள்ளார். பெரும்பாலும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தீர்மானத்தின் பின் அதன் முடிவுடன் திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வரலாமெனத் தெரியவருகிறது**

கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி கூறுகையில்; திரு. தொண்டமான் தமது யாழ். விஜயம் பற்றித் கொழும்பில் பத்திரிகையா தெரிவித்தார். அவர் மேலும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவின்பின் தாம் யாழ். செல்லவுள்ளதாகவும், தமிழீழக் கோரிக்கைக்கு ஈடாக மாற்று யோசனையை முன்

(4ம் பக்கம் பார்க்க)

## இருவரைத் தேடி பொலிஸார் வலைவிரிப்பு

(கொழும்பு)
அம்பாறை மகரகம குண்டு வெடிப்பு தொடர்பாக சந்தேகிக்கப்படும் ஒரு ஆணையும் ஒருபெண்ணையும் தேடி பொலிசார் நாட்டின் பெரும் பகுதிகளில் வலைவிரித்துள்ளனர்.

சந்தேகிக்கப்படும் நபர் செல்வநாயகம், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு கிளை தலைதிகாரியென பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர் தீவிரவாத குழுவொன்றின் முன்னாள் உறுப்பினருமாவாராம்.

தேடப்படும் பெண்ணை பற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. (கே)

## யுத்த களத்தில் போரிடும் தளபதிகளிடையே முரண்பாடு

[கொழும்பு]
வடக்கு கிழக்கில் யுத்த களத்தில் போரிடும் இராணுவ தளபதிகளுக்கு இடையிலும் பலத்த முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இராணுவ ஜெனரல்களிடம் தற்போது நடைபெறும் இழுபறிகளைத் தொடர்ந்து இந்த முரண்பாடு ஆரம்பமாகியுள்ளது.

[4-ம் பக்கம் பார்க்க]

## இந்தியா — அமெரிக்கா உறவில் விரிசல் ஏற்படலாம்

(புதுடில்லி)
ரஷ்யா தன்னிடமுள்ள 'ராக்கெட்' தொழில் நுட்பத்தை இந்தியாவுக்கு அளிக்கக்கூடாதென்று அமெரிக்கா ரஷ்யாவை கட்டாயப்படுத்தியதை தொடர்ந்து இந்திய லோக் சபாவில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான உண்மைகளை அரசு சபைக்கு தெரியப்படுத்தவில்லையென்றுகூறிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பிரதம மந்திரி இதுபற்றி அறிக்கையொன்றை வெளியிடவேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை இந்தியாவின் ஆதிபத்திய உரிமையை பாதிப்பதால் இதுபற்றி விசேட விவாதம் நடத்தப்படவேண்டும் என்று பல உறுப்பினர்கள் கேட்டுள்ளனர். (கே)

## 13பேரைக் கொன்ற ஜே.வி.பி. உறுப்பினர் கைது

(கொழும்பு)
ஜே.வி.பி. படுகொலைக் குழுவிற்கு தலைமை தாங்கியவரா கருதப்படும் நபர் ஒருவரை கரந்தெனியாப் பொலிசார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

பொடிபுத்தா என அழைக்கப்படும் இந்த நபர், தான் தலைமைதாங்கி நடத்திய தாக்குதல்களைப் பொலிசாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் விபரித்துள்ளார்.

1988—89ல ஜே. வி. பி.யின் நடவடிக்கைள் உச்சக்கட்டத்

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தமிழர் மதம்மாற்றப்படுகிறார்கள்

[திருமலை]
கிழக்கில் இராணுவ நடவடிக்கையால் துன்புறும் தமிழ் மக்கள் தீவிரமாக மதம் மாற்றப்பட்டுவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமலையில் கிண்ணியா, பச்சைநூல் அகதிமுகாம்களிலுள்ள தமிழ் அகதிகள் முஸ்லிம் காடையர்களால் பலவந்தமாக மதமாற்றம் செய்யப்படுவதுடன் மதம் மாறாவிடின் கொல்லப்படுவதாக

[4-ம் பக்கம் பார்க்க]

## 'குமணை' இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)
'குமணை' கப்பல் இன்று செவ்வாய்க்கிழமை, உணவுப் பொருட்களுடன் பருத்தித்துறைத் துறைமுகம் வந்து சேரவுள்ளதாகத் தெரியவருகின்றது. [59]

## கைதிகள் விடுதலை பற்றி பலாலியில் இன்று பேச்சு

[யாழ்ப்பாணம்]
பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களை விடுதலை செய்வது சம்பந்தமாக முக்கிய பேச்சுக்களை நடத்துவதற்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இன்று பலாலிக்குச் செல்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆப்கன் முன்னாள் அதிபர் இந்தியா செல்வார்

(காபூல்)
பதவியிலிருந்து வெளியேறிய முன்னாள் ஆப்கான் முதல்வர் ஜனப் நஜிபுல்லா இந்தியாவை நோக்கி புறப்பட ஆயத்தம் செய்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் வர்த்தகர்கள் கொழும்பில் விடுதலை

[கொழும்பு]
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்துதவுவதாக சந்தேகத்தின்பேரில் கொழும்பில் கைது செய்யப்பட்ட தமிழ் வர்த்தகர்கள் இராணுவ புலனாய்வுத்துறையின் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் முப்பது வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டதாக அரசுசார்பு செய்தி நிறுவனங்கள் தகவல்களை வெளியிட்டிருந்த போதும் எட்டு வியாபாரிகளே கைதுசெய்யப்பட்டு ஒருவாரகாலத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். (எஸ்)

## இராணுவ அதிகாரிகள் பலர் ஒருமித்து பதவி விலகுவர்?

(கொழும்பு)
கூட்டுப் படைத் தலைமைத் தளபதி ஹமில்டன் வனசிங்காவின் பொறுப்பில் இருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டு, ஒவ்வொரு படைத் தளபதிகளுக்கும் தனித்தனியே அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதனால், பல இராணுவ அதிகாரிகள் ஒருமித்து ராஜினாமாச் செய்ய முன்வந்திருப்ப

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### புத்தாண்டுப் பலன்

நாறிந்த சோதிடர் ஜோஸ்யரின் கணிப்பில் பன்னிரண்டு இராசிகளுக்கும் புத்தாண்டுப்பலன் வெளிவந்துள்ளது. ''ஜோஸ்யரின் ராசி பலன்'' என்றுகேளுங்கள். விலை 9/75. [சி–6185]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 (1992) 19–04–92 ஞாயிறு நடைபெறவிருந்த புலமைப் பரிசில் மாதிரி பரீட்சை 21-04–92 செவ்வாய் மு. ப 8–00, மு. ப. 11–00க்கும் ஆண்டு 5 (1991 23-04–92 வியாழன் மு. ப 7–00, மு. ப. 11–00க்கும் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். (சி–6182)

### ஜோதிட விஞ்ஞானம்

27-04-92 செவ்வாய் மாற்றம், புத்தாண்டுப் பலன்கள், மௌனகுரு கடவுள் சுவாமிகள் அற்புத வரலாறுகள் அடங்கியவை. ரூபா 7/–. எங்கும் விற்பனையாகின்றன. சோபிதா, ரகுநாதன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (நூலாசிரியர்: சத்தியதாஸன்). (சி–6174)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள். வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்கள். பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம். 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [சி-6126]

### மணமகன் தேவை

33 வயதுடைய சுவாதி நட்சத்திரம் 7ல் செவ்வாய் கூடிய A/L படித்த மணமகளுக்கு, உள்நாட்டில் தொழில் புரிபவராகவோ, தோட்டக்காரர் அல்லது கடை வைத்திருப்பவராகவோ மணமகன் தேவை. இலச்சுமி திருமண சேவை, செ. விசயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய்(சி–6186)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திகுழுவினால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்;

தெல்லிப்பழை 'கிறுஸ் கொப்பர்ஸ்' அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் அணி சுன்னாகம் ஸ்கந்தா கல்லூரியில் மோதும். மற்றொரு போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து மனோகரா எதிர் இருதயம் போட்டியில் வென்ற அணி நெல்லியடி ம. ம. வி யில் மோதும்.

## அதிபர்கள் கவனத்திற்கு

(உடுவில்)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட ஆசிரிய ஆளணியினர் தரவுகள் சேகரிக்கும் படிவங்களை உடனடியாக இக் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் பெற்றுக்கொள்ளுமாறும், பெறப்படும் படிவங்களை பூர்த்திசெய்து ஏப்ரல் 27ம் திகதிக்குமுன் தமக்கு அனுப்பி வைக்குமாறும் பண்டத்தரிப்பு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வ. மஹேசவேலு அறிவுறுத்தியுள்ளார்.

## 'மே' எழுச்சி நாளுக்கான செயற்பாட்டு குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பல்வேறு தனியார், கூட்டுறவு, மற்றும் திணைக்களங்கள் சார்ந்த தொழிற்சங்கங்களினதும், வர்த்தக சங்கங்களினதும் மேநாள் செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் தமிழீழ விடுதலைப் புலிகளினது யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் தமிழீழ அரசியல் பொறுப்பாளர் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ்மாறன் தனதுரையில், நெருக்கடிகள் மத்தியிலும் உழைக்கும் மக்கள் சகலருக்குமான பாதிப்புக்களை வெளிக்கொணரும் நாளாக மேநாளை முன்னெடுப்பது தொழிற்சங்க வரலாற்றில் முக்கிய பரிணாம கட்டம் எனவும், இதன் வீச்சு சர்வதேசிய பரப்புகளை தொடுமாதலால் தொழிலாளர்கள் இம்முறை சிறப்பாக முனைப்புடன் செயற்பட்டு சகல ஒடுக்குமுறைகளுக்கும் போர்முகம் காட்டும் எழுச்சி நாளாக சிறப்பிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனக் கூறினர்.

யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி பேரினவாதத்தின் கொடூரக்கரங்கள் சகலரையுமே பாதிப்புக்குள்ளாக்குதால் நாளாந்தம் உழைக்கும் மக்கள் மேநாளை, பேரினவாத விலங்குகளை உடைத்தெறிவதற்கான விடுதலைப் பேராவலை வெளிக்காட்டும் நாளாக ஒழுங்கமைக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அனைத்து நிறுவனங்களினதும் கருத்துப் பரிமாற்றத்தின் பின்னர் தேசவிடுதலைக்கான அறைகூவலை விடுக்கும் நாளாக மேநாளை ஒழுங்கமைப்பதற்கான செயற்பாட்டுக் கூட்டுக்குழு அமைக்கப்பட்டது. இக்கூட்டுக்குழு அனைத்து மக்களதும் கலந்துகொள்ளும் எழுச்சிநாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

## இராசிபலன்

### 21/04/1992
### செவ்வாய்க்கிழமை
### (தமிழுக்கு சித்திரை 09)

சதுர்த்தி மு. ப. 10-42 வரை, கேட்டை மாலை 6-42 மரணயோகம், இராகுகாலம் மாலை 3–01 முதல் 4–31வரை, சுபநேரம் காலை 10–31 முதல் 12–01 வரை.

மேஷம்: உடல் உபாதை, முணுமுணுப்பு, காரிய தாமதம்.

இடபம்: பதட்டம், வருவாய் பாதிப்பு மனச்சுமை.

மிதுனம்: தொழில் லாபம், அன்னியர் உதவி, மனை சிறப்பு.

கடகம்: தாய்ப்பாசம், இனசன வரவு, புதிய முதலீடு.

சிங்கம்: வாக்குவாதம். அதிக செலவு, தொழில் போட்டி.

கன்னி; தொழில் கவலை, பிரயாசை, குடும்பக் கஷ்டம்.

துலாம்: வீட்டில் மகிழ்ச்சி, நண்பர் வருகை, புதிய உறவு.

விருச்சிகம்: உறவினர் கவலை பணமுடை, அலைச்சல்.

தனுசு;உயர்ந்த நிலை, அபிப்பிராயபேதம், காரியசித்தி.

மகரம்: தொழில் நஷ்டம், போட்டி மனப்பான்மை, வெறுப்பு.

கும்பம்: காரியம் கைகூடல், மகிழ்ச்சிப் பிரவாகம், பாராட்டு.

மீனம்: புதிய தகவல், மாமனார் உதவி, அதிகாரி பாராட்டு.

— ஜோஸ்யர்.

## 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப்பிரிவில் 18 பரீட்சை நிலையங்களில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது,

இப்பரீட்சை இம்மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவைச் சேர்ந்த சுமார் 2150 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். [139]


## பழவகைகள் தேவை

★ மாம்பழம் ★ பப்பாப்பழம்
★ விளாம் பழம் ★ எலுமிச்சம பழம்
★ தோடம்பழம் (ஜமுநாரம் பழம் உட்பட)

சிறு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்கிறோம்.

மாதிரி (Sample) உடன் தொடர்பு கொள்ளவும்.

**TasteLine Industries (Pvt)Ltd**
No. 14, சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(ஏ–2086)


## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



**வேலு அப்புக்குட்டி**

தோற்றம்: 1928-06-22
மறைவு: 1988-04-07

திதி: 21 04 1992

தீபச் சுடர் விளக்கே
தியாகத்தின் ஒளி விளக்கே
நான்காண்டு ஓடிமறைந்திட்டாலும்
ஒளியான உங்கள் திருவுருவம்
எங்கள் நினைவில்
ஒளிவிட்டு ஒளிருதையா
சீருடனும் சிறப்புடனும்
எமை வளர்த்தாய்
எம் சிறப்பைக் காணமுன்பே
இறைவனடி சேர்ந்துவிட்டீர்.

அன்பு ஐயாவின்
ஆத்மாசாந்திய வேண்டிய பிராத்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றுர், உறவினர்கள்,
சகோதர - சகோதரிகள்.

ஐ. எஸ். வி. வீதி,
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

[சி 6184]

## சாவகச்சேரி நகரசபை

# கூறுவிலை கோரல்

### நூல் நிலைய உபயோகத்திற்கான
### மரத்தளபாடங்கள்

சாவகச்சேரி நூல்நிலையத்தின் உபயோகத்திற்காக கீழ்க்காட்டப்படும் மரத்தளபாடங்கள் செய்து தருவதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் சாவகச்சேரி நகரசபையால் 28–04–2 நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கூறுவிலைகள் 'செயலாளர், நகரசபை, சாவகச்சேரி' என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இச் சபை அலுவலகத்தில் வைத்திருக்கும் கூறுவிலைப் பெட்டிக்குள் போடப்படல் வேண்டும்.
2. கூறுவிலைகள் உள்ளடக்கிய உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'நூல்நிலைய மரத்தளபாடங்களுக்கான கூறுவிலை' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
3. கூறுவிலையின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ எவ்வித காரணமும் காட்டாது நிராகரிக்க சபையின் செயலாளருக்கு முழு உரிமையுண்டு.
4. செய்யவேண்டிய மரத்தளபாடங்களின் மாதிரிப் படங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
5. செய்யவேண்டிய தளபாடங்களின் விபரம்:

| | விபரம் | எண்ணிக்கை: |
|---|---|---|
| 1. | அலுவலக மேசை | 01 |
| 2. | கைக்கதிரைகள் | 01 |
| 3. | வாசிப்பு மேசைக்கதிரைகள் | 20 |
| 4. | வாசிப்பு மேசை (பத்திரிகை) | 03 |
| 5. | வாங்குகள் | 02 |
| 6. | புத்தக வாசிப்பு மேசை | 01 |
| 7. | புத்தக இருக்கைகள்—மாம்பலகை | 15 |
| 8. | புத்தக இருக்கைகள்—முதிரைப் பலகை | 15 |

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
14-4-92.

(ஏ-2085)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை.

## விஞ்ஞானபீட முதலாவது அரையாண்டு பரீட்சை-1991

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் யாவும்பின்வரும் திகதிகளுக்குப்பிற் போடப்பட்டுள்ளது.

முதலாவது அரையாண்டு முதலாவது வருடப் பரீட்சை ஆரம்பம்: 27-04-1992.

முதலாவது அரையாண்டு இரண்டாம் வருடப் பரீட்சை ஆரம்பம்: 06-05–1992,

முதலாவது அரையாண்டு மூன்றும் வருடப் பரீட்சை ஆரம்பம்: 11-05-1992.

— பதிவாளர்

(எ 2087]

# ஆரோக்கியமான பிள்ளைகள் பிறப்பதற்கு போஷாக்குணவை தாய்மார் உண்ணவேண்டும்

## வைத்திய கலாநிதி திருமதி சுந்தரலிங்கம் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''யாழ். போதனு வைத்திய சாலையில் போர்க்காலச் சூழ் நிலையில் ஏற்படும் அதிர்ச்சி போன்ற சம்பவங்களால் உரிய காலத்துக்கு முன்பு குறை மாதமாக அநேக பிள்ளைகள் பிறக்கின்றன''

இவ்வாறு யாழ். போதனு வைத்திசாலை மத்திய மருந்துக் களஞ்சியத்தில் நடைபெற்ற ''போசாக்கின்மையும் அவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகள்'' என்ற கருத்தரங்கில் வைத்திய கலாநிதி திருமதி என். சுந்தரலிங்கம் குறிப்பிட்டார். கருத்தரங்கில் கலாநிதி தெய்வேந்திரம், கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர் குணரத்தினம் ஆகியோரும் பங்குகொண்டனர்.

அவர்மேலும் கூறியதாவது: போசாக்கின்மையாலும் அநேக குழந்தைகள் நிறை குறைவாகப்பிறக்கின்றன. கர்ப்பவதிகள்கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் மட்டும் போசாக்கு உணவை எடுக்கின்றனர். ஒரு ஆரோக்கியமான குழந்தை பிறப்பதற்கு இது போதாது. ஒரு பெண்ணுக்கு 12-13 வயதில் இனப்பெருக்கம் சம்பந்தமான உறுப்புகள் தொழிற்படுகிற நேரத்தில் போசாக்குள்ள உணவு முக்கியமாகக் கொடுக்கவேண்டும். தாய்மாரின் அக்கறையின்மை காரணமாகவும் பொருளாதாரக் குறைவினால் போஷாக்குள்ள உணவு சிலருக்கு கிடைக்காமல் போகின்றது.

இன்று யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வீட்டிலுள்ள ஆண்பிள்ளைகளுக்கு கூடுதல் உணவு கொடுத்தும், பெண் பிள்ளைகளுக்கு குறைந்தஉணவு கொடுக்கும் பழக்கத்தினாலும் இந்தநிலை ஏற்படுகிறது.

அநேக வீடுகளில் குடும்பத்தில் உள்ள கணவர், குழந்தைகளுக்கு உணவு கொடுத்த பின்புதான் தாயானவள் சாப்பிடும் வழக்கம் உள்ளது. இதனால் சில இடங்களில் கடைசியாகச் சாப்பிடும் தாய்மாருக்கு போஷாக்குள்ள உணவு கிடைக்காமல் போகின்றது.

அடிக்கடி குழந்தைகள் பெறுவதும் ஆரோக்கியமான குழந்தை ஒன்றை பெற்றெடுப்பதற்கும் இன்னொரு குழந்தைக்கும் மூன்றுவருடகால இடைவெளி வேண்டும்

சிலருக்கு இரத்தசோகை நோய் ஏற்படுகிறது, இதை பெரிதாக எவரும் எடுப்பதில்லை, இரும்புச்சத்து குறைபாடு தான் காரணம். இந்த இரும்புச்சத்தை கீரைவகைகள் உட்கொள்ளுவதன் மூலம் நாம் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த இரத்தசோகை நோய்க்கு கொழுக்கிப்புழுவும் காரணமாக உள்ளது, இந்த நோய் உள்ளவர்களுக்கு கண், கைகள் வெளிறி இருக்கும். மயக்கம், தலைச்சுற்று, பசியின்மை ஆகியவையும் ஏற்படுகின்றன.

இரத்தஅமுக்கம் குறைவாக இருக்கும், முகம், கைகள் வீக்கம் ஏற்படும்.

குழந்தை ஒரு வயதுவரை தாயுடைய கவனிப்பில் இருக்கிறது. அந்தநேரத்தில் தாய்ப்பால் கொடுக்கப்படுகிறது இந்தக்காலங்களில் தாயுடைய கவனிப்பு அதிகமாகிறது. ஒரு வயது முடிந்தபிறகு குழந்தை வெளியே வருகின்றது. இதனால் பலவிதமான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். தாயின் கவனிப்பும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகின்றது. இதனால் போஷாக்கு உணவு குழந்தைகளுக்கு கிடைக்காமல் போகின்றது. குழந்தை பலவித நோய்களுக்கு உள்ளாகின்றது. (சு)

# 50 இராணுவ நடவடிக்கைகளில் 500 படையினரை கொன்றோம்

## - இளம்பரிதி உரை -

(யாழ்ப்பாணம்)

''இந்திய வல்லாதிக்கம் எமது போராட்டத்துக்கு எதிராகச் செயல்படுகின்றது, ஆனால் இந்திய மக்களோ எம் பக்கம் உள்ளார்கள்.''

இவ்வாறு யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில்நடைபெற்ற அன்னை பூபதி நினைவரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; எமதுபோராட்டத்துக்கு ஆதரவாக இந்தியாவில் 17,000 பேர் கூட்டம் நடத்தியபோது அவர்களைக் கைது செய்தார்கள். அந்த 17,000 பேரும் இந்தியாவில் உள்ள புத்திஜீவிகள் அறிவியல் நிபுணர்கள் ஆவார்கள்.

இந்திய அரசாங்கம் எமக்கு நெருக்குதலைப்போட்டு, எமது புரட்சிகர தலைமைக்கு எதிராகச் செயல்படுகின்றது. எமது சுதந்திரத்தை, எமது சமூக பொருளாதார சுபீட்சத்தையும் விரும்பவில்லை.

இவர்கள்தான் ஒரு காலத்தில் 15 பேரை தற்கொலைப் படையாகப் பயிற்சிகொடுத்து எமது தலைமையை அழிக்க முனைந்தவர்கள்.

அன்னை பூபதி இன்று சர்வதேச பெண்மணியாக அவரின் தியாகத்தால் உயர்த்தப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவம் ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் எடுத்துள்ளன, இதன்மூலம் 500 இராணுவம் எம்மால் கொல்லப்பட்டுள்ளார்கள். 200 ஆயுதங்கள் எம்மால் அழிக்கப்பட்டன.

இந்தப் புலிகளின் வளர்ச்சி கண்டு இராணுவ அதிகாரிகளிடையில் கருத்து வேறுபாடு தோன்றியுள்ளன. கிழக்கு மாகாணத்தில் 3 மாதத்தில் புலிகள் அழிக்கப்படுவார்கள் என்று சிசில் வைத்தியரத்தினு கூற முடியுமானால் செய்து பாருங்கள் என்று ஹமில்டன் வனசிங்கா கூறியுள்ளார்.

கொப்பேகடுவாவுக்கும் எமது பலம் நன்றுகத் தெரியும், கூடிய உயிர்ச்சேதம் ஏற்படும் என்ற காரணத்தினால் தான் இன்று யாழ்ப்பாண நகர்மீது மேற்கொள்ளவிருந்த இராணுவ நடவடிக்கை பின் போடப்பட்டுள்ளது.

தாங்கள் முன்னேவரப் பயந்து, எமது துரோகக்கும்பலை முன்னேவிடுவதற்கு பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சிசில் வைத்தியரத்னு ஜே. வி. பி. யில் இருந்த 50,000 சிங்கள இளைஞாகளை கொன்று குவித்தவர். எப்போதும் தோல்விகளை இவர் ஏற்றுக்கொள்வதில்லை.

எப்படியிருந்தபோதிலும் நாம் எதிரிமீது அவதானமாக இருக்கவேண்டும்'' என்றார். (சு)

# ரயிலில் ஏற முயன்றவர் தவறி வீழ்ந்து மரணம்

[கொழும்பு]

ரயிலில் ஏற முயன்ற இளைஞர் ஒருவர் தவறிவிழுந்து ரயிலில் நசுங்கி பரிதாபமாக மரணமான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு செல்ல இவர் அவசரமாக ரயிலில் ஏற முயன்ற போதே தவறி சில்லுக்குள் வீழ்ந்துமரணமானுர்,

அவசர முயற்சிகளால் ரயில் விபத்துகளில் சிக்குவோர் தொகை அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# குற்றம் செய்யும் அரசு அதனை திசைதிருப்ப முயல்கிறது

## - சிறிமா குற்றச்சாட்டு -

(கொழும்பு)

இரவில் குண்டுகளை வீசிவிட்டு அடுத்தநாள் தங்களுக்கு எதிரான ஆட்களை சம்பந்தப்படுத்துவதே தற்போதைய அரசின்வேலைஎன்றுஎதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசுமீது குற்றஞ்சாட்டியுள்ளார்,

அம்பாறை, மஹரகமகுண்டு வெடிப்புகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும்தொடர்பு இருப்பதாக கூறப்பட்டதையடுத்தே எதிர்க்கட்சி தலைவி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; மஹரகம குண்டுவெடிப்பு அரசின் பின்னணியில் இயங்கும் 'கறுப்பு பூனை' களின்வேலை. இதனை திசைதிருப்பும் முயற்சியாக அரசு சுதந்திரக்கட்சிமீது பழியை போட்டுள்ளது.

இவ்வாருன செயல்களை செய்துவிட்டு அவற்றை தனக்கு எதிரானவர்கள் மீது சுமத்தும் முயற்சியில் தற்போது அரசு முனைந்துவருவதாகவும் திருமதி சிறிமா குற்றம் சாட்டினுர். [மா]

# 3 தினங்கள் முத்தமிழ் விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆயராக இருந்து இளைப்பாறும் ஆயர் வ, தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி, பொன், வைர விழாக்களைச் சிறப்பிக்கும் முகமாக எதிர்வரும் 24ம், 25ம், 26ம் திகதிகளில் யாழ், திருமறைக் கலாமன்ற அரங்கில் மூன்று நாட்கள் முத்தமிழ் விழா நடைபெறவுள்ளது. (59)

# இன்று

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கிடையே நடாத்தப்படும் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாட்டுப்பாடல் ஆகிய போட்டிகள் இன்று செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளது.

# நன்கொடைப் பணம் பிள்ளைகள் பெயரில் சேமிப்பு

(கொழும்பு)

நீர்ப்பாசன திணைக்களத்தில் கடமையாற்றி சேவைக் காலத்தில் மரணமடைந்த ஊழியர்களுக்கான நன்கொடைப் பணம் அவர்களின் பிள்ளைகளின் பெயரில் இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக்கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தகவல்களை கொழும்பில் உள்ள நீர்ப்பாசன திணைக்கள தமிழ் பண்பாட்டுக்கழகம் தெரிவித்துள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களை 'தபால் பெட்டி இலக்கம் 1138, கொழும்பு' என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [150]

# க. பொ. த. பரீட்சைகளில் 2,600 மோசடிச் சம்பவங்கள்

[யாழ்ப்பாணம்]

அண்மையில்நடந்த கல்விப் பொதுத் தராதர உயர்தர, சாதாரணதர பரீட்சைகளில் இம்முறை அநேக மாணவர்கள் மோசடிச் சம்டவத்தில் ஈடுபட்டுள்ளனர்,

இவ்வாறு பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது- ஆள் மாருட்டம், போலி அடையாள சான்றிதழ்கள், ஒருவரின் விடைத்தாள்களை அடுத்தவருக்கு பரிமாற்றம் செய்தல் போன்ற 2 600 சம்பவங்கள் நடந்துள்ளன.

இவைபற்றி பரீட்சைத் திணைக்களம் நுணுக்கமாகப் பரிசீலனைசெய்து சம்பந்தப்பட்டவர்களின்மேல் நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இம்மோசடிச் சம்பவங்கள் நடைபெற்றுலும். 1991-ம் ஆண்டு கல்விப்பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் அநேக மாணவர்கள் சித்தியடையவில்லையென்றும். கணித பாடத்தில் பன்னிரண்டு வீதமான மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சு]

## கிரிக்கெட்

# சிறிகாந்தின் அணி

## கவஸ்கார் அணியை வென்றது

(சென்னை)

தமிழகம் ஈரோட்டில்நடந்த ரி. என். சேகர் நிதி உதவிக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கிருஷ்ணமாசாரி சிறிகாந் தலைமையிலான 'வாசவி' அணிசுனில் கவஸ்கார் தலைமையிலான எம். ஆர். எவ். அணியை 5 விக்கெட் வித்திபாசத்தில் வென்றது.

முதலில் ஆடிய கவஸ்கார் அணி 37 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்சய் மஞ்ரேகர் 73 ஓட்டங்களையும் கவஸ்கார் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

அடுத்து ஆடிய சிறிகாந் அணி 35 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 310 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தமிழக வீரர் வி. வி. சந்திரசேகர் சிறப்பாகஆடி 172 ஓட்டங்களையும் அணித்தலைவர் சிறிகாந் 62 ஓட்டங்களையும் டபிள்யூ வி. ராமன் 45 ஓட்டங்களையும் பெற்றனர், (சி)

# பழைய கார்களை புலிகள் கொழும்பில் வாங்குகிறார்கள்

## - பொலிஸார் தகவல்

[கொழும்பு]

கொழும்பில் குண்டுகளை வெடிக்கவைக்க புலிகள் பழைய கார்களை வாங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பழைய கார்களை அதிக விலை கொடுத்து தமது தேவைக்காக புலிகள் புறக்கோட்டை, வத்தளை, கொட்டாஞ்சேனையில் பொய் முகவரிகளை கொடுத்து வாங்கியுள்ளனராம்.

[4-ம் பக்கம் பார்க்க]

### பத்திரிகையாளர்களை

# கூண்டில் ஏற்றி விசாரிக்க தமிழக அரசு நடவடிக்கை

(சென்னை)

''இலஸ்ரேட்டட் வீக்லி ஒவ் இந்தியா'' வார இதழின் முன்னுள் கட்டுரையாளர் கே. பி. சுனில்உட்பட 'முரசொலி' 'கோவை மாலை முரசு' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களை கூண்டில் ஏற்றி விசாரிப்பதென தமிழக சட்டப்பேரவையில் நேற்று தீர்மானிக்கப்பட்டது.

முன்னைய பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் புகைப்படங்களை தற்போதையநிகழ்ச்சிபோல்பிரசுரித்ததற்காகவும் 'இலஸ்ரேட்டட் வீக்லி ஒவ் இந்தியா' இதழின் ஆசிரியரையும், கட்டுரையாளரையும் விசாரிப்பதெனத்தீர்மானமாகக்கப்பட்டது.

இதன்படி அவ்விருவரையும் பேரவையின் முன்னுல் நேற்று ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டிருந்ததாகவும் ஆனுல் கட்டுரையாளர் கே. பி. சுனில் தம்மால் ஒரு மாதத்திற்கு சபைக்கு வரமுடியாது எனக் கடிதம் எழுதியதாகவும் அவரை கைது செய்து பேரவைக்கு அழைத்துவர கைது வாரண்ட் விரைவில் அனுப்பப்படும் என்றும் சபைத்தலைவர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பத்திரிகையின் தற்போதைய ஆசிரியர் திரு' சுனில் டக்கர் சம்பந்தப்பட்ட கட்டுரை பத்திரிகையில்வெளிவந்த சமயம் ஆசிரியராக கடமையாற்ருதபடியால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

மேலும் பேரவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கப்பட்டவற்றை பிரசுரித்தமைக்காக 'முரசொலி' பத்திரிகையின் ஆசிரியரும் அவையில் நடக்காத ஒன்றை நடந்ததாக பிரசுரித்தமைக்காக கோவை மாலை முரசு பத்திரிகைகளின் ஆசிரியரும் விசாரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைக்கென சட்டப் பேரவையில் தனியான ஒரு கூண்டும் அமைக்கப்பட்டுள்ளதாம். (சு)

# வெளிநோயாளர் பிரிவில் டாக்டர்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்திய சாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் நேற்றிலிருந்து வழமைபோல் கூடிய அளவில் வைத்தியர்கள் சமூகம்கொடுத்தல்தயடுத்து வழமையான நேரம் வரை நோயாளர்களைப் பார்வையிட்டனர்.

ஒரு வாரத்திற்குப் பின்னர் நேற்று வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு நோயாளாகளால்நிரம்பிவழிந்தது. நேற்று மட்டும் 1300க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றனர். (56]

### அதிபர்களுக்கான

## அவசர கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர் மதிய உணவு முத்திரை வழங்கல், இலவச பாடப்புத்தகங்கள் கொத்தணி ரீதியாக வழங்கத் தேவையான விபரம், 5ம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கான மேற்பார்வை சம்பந்தமாகவும்,அடுத்ததவணை ஆரம்பம் பற்றியும் கலந்துரையாடுவதற்கு கொத்தணி அதிபர்களையும் பாடசாலை அதிபர்களையும், தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தினர் நாளை புதன்கிழமை மு. ப 8-30 மணிக்கு றிபேக் கல்லூரிக்கும் மருதனுமடக் கல்விக் கோட்டத்தினரை நாளை பி. ப. 1 மணிக்கு இராமநாதன் கல்லூரிக்கும் பண்டத்தரிப்புகல்விக் கோட்டத்தினரை வியாழக்கிழமை மு ப 10மணிக்குபண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு சமூகம் தரும் வண்ணம் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

### விஞ்ஞான பாடப் பரீட்சை

## இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத்தராதர உயர்தர விசேட பரீட்சையில் விஞ்ஞான பாடங்கள் இன்று தொடக்கம் ஆரமபமாகின்றன.

இதன்பிரகாரம் இன்று விலங்கியலும், பிரயோக கணிதமும் நடைபெறும். இப் பரீட்சை இம்மாதம் 30-ம் திகதியுடன்முடிவடையும். [சு]

### ஒரு பவுசர் தண்ணீர் கொழும்பில்

# 400 ரூபாவாக விற்பனை

(கொழும்பு)

கொழும்பு நகர்ப்பகுதிகளில், ஒரு பவுசர் தண்ணீர் 400 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

வரட்சிகாரணமாககொழும்பில் தண்ணீர், மின்சார வெட்டுகள் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பின்பு கொழும்பிலுள்ள ஹோட்டல்கள், தங்கு விடுதிகளில் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை சமாளிக்கும் பொருட்டு, பவுசர்களில் விற்பனை செய்யப்படும் தண்ணீரை இவர்கள் முண்டியடித்து வாங்குவதால், இதன்விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேநேரம் மின்சார வெட்டினுலும் கொழும்பில் பல தொழிற்சாலைகளும், வேலைஸ்தலங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுளளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

### பழைய கார்களை

(3 ம பக்கத் தொடர்ச்சி)

பழையவாகனங்களை வாங்க வருவோரின் அடையாளத்தை உறுதிப்படுத்துமாறும் பொலிஸார் வாகன உரிமையாளர்களை கேட்டுள்ளனர்.

இதேபோல் நகரில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் குறித்து அவதானமாயிருக்குமாறும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (சி)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### ★ செல்வி பிரியா ஜெயலிங்கம் ★

ஏழாலை மத்தி அசோக் வாசத்தைச் சேர்ந்த ஜெயலிங்கம் சிவலோகநாயகி தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரியா இன்று [21-04-92] முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்ருர்.

இவரை அப்பா, அம்மா, தாத்தா, அப்பப்பா, அப்பம்மா, அன்ரிமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணுமார், மச்சாள்மார், அத்தான்மார் அனைவரும் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

(ஏ 2090) ''அசோக் வாசம்'', ஏழாலை.

### தெரிவுக்குழுவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தால் அதனை அடிப்படையாக வைத்து பேச்சுக்களை நடத்தலாமென ஏற்கெனவே விடுதலைப் புலிகள் சமிக்ஞை காட்டியுள்ளனர் என்ருர்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு இப்பிரச்னைக்கு ஒரு தீர்வை முன்வைக்க வேண்டுமென்பதில் சகல அரசியல்கட்சிகளும் ஆர்வம் காட்டிவரும் இவ்வேளையில் வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து இணக்கம் காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு இல்லாமல் இனப்பிரச்னைக்கு தீர்வுகாணமுடியாதென்பதால் இணைப்புதவிர்க்க முடியாததென பலகட்சிகளும் கூறுகின்றன என்றும் திரு. தொண்டமான் கூறியுள்ளார். (சி)

### 13 பேரைக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் இருந்தபோது, இவர் இரண்டு பொலிசார் உட்பட 13 பேரை கொலைசெய்ததாக தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற குண்டு வெடிப்பு, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டுக்கு தீ வைத்தமை, வங்கிகொள்ளை ஆகியவற்றில் பங்குபற்றியமையையும் தெரிவித்துள்ளார்.

இவரால் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும் பொலிசாரால் கைப்பறப்பட்டன. (கே)

### கைதிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடல் பிராந்தியங்களில் கைதுசெய்யப்பட்ட மீனவர்களையும், இராணுவச் சுற்றிவளைப்பின்போது சிக்குண்ட பொதுமக்களையும் நீண்டகாலமாகப் பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைத்திருப்பது சம்பந்தமாக அண்மையில் கொழும்பு சென்ற யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், கொழும்பில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனுகவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இன்று பலாலி இராணுவ முகாமுக்குச் செல்கின்றனர். (வி)

### யுத்தகளத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் கீழ் இயங்குவதை முப்படைத் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் விரும்பாததையடுத்தே ஜனுதிபதி மாற்றங்களை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. (மா]

### இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரிய வந்துள்ளது.

இந்த இராணுவ அதிகாரிகளிடையே, ஜனுதிபதியின் இத்திடீர் நடவடிக்கை எரிச்சலையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது மாத்திரமல்லாது, இராணுவஅமைப்புக்கிடையே போட்டியும், பூசலும எழுந்துள்ளது.

இராணுவ மட்டத்தில் எழுந்திருக்கும் இத்தகைய குழப்பமான பூசல் குறித்து 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை இராணுவத்தை வெகுவாகக் குறை கூறியுள்ளது.

புலிகள் பல்வேறு வழிகளில் இராணுவத்தைப் பலவீனப்படுத்த முயற்சிக்கும்இவ்வேளையில், இராணுவத்திடையே போட்டியும், பூசலும் நிலவி வருவது பெரும கவலையளிப்பதாகவும் 'சண்டே ரைம்ஸ்' மேலும் தெரிவித்துள்ளது.

### ஆப்கன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேற முயற்சித்த ஜனுப் நஜிபுல்லாவின் முயற்சி தோல்வியுற்றதையடுத்து கடந்த நான்கு நாட்களாக ஐ. நா. செயலக கட்டிடத்தினுள் தஞ்சம் புகுந்திருந்தார்.

ஐ.நா. தூதுவர் தற்காலிகமாக அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, ஜனுப் நஜிபுல்லா நாட்டை விட்டு வெளியேற இணக்கம் காணப்பட்டது.

இந்தியா இவருக்கு அகதிகள் அந்தஸ்து வழங்க முன்வந்ததை அடுத்து, இவர் இந்தியா வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (கே)

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளனவும் பயமுறுத்தப்பட்டு வருகிருர்களாம்.

கிழக்கில் சொல்லொணு துயர்களை அனுபவித்துவரும தமிழர்களின் இக்கட்டான நிலையை பயன்படுத்தி மதம் மாற்றம் செய்யப்படுவதாகவும் தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்படுவதாகரும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்னர். [சி)

### அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த இழுபறிகளுக்குக் காரணம் தங்களுடைய தனித்துவத்தை ஒவ்வொரு வரும் காட்டமுனைவதே என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

இராணுவ ஜெனரல்கள் தங்களுக்குள் பல்வேறு விசித்திர விளையாட்டுகளிலும் ஈடுபட்டுவரும் இவ்வேளையில் விடுதலைப்புலிகள் பாதுகாப்பு படையினரை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகிருர்கள் என்றும் தெரிவித்துள்ளது. [மா]

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து தாமோதரம்

மஞ்சந்தோட்டம், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சரவணமுத்து தாமோதரம் (இளைப்பாறிய அதிபர்) கொழும்பில் காலமானுர். இவர் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அனபுக்கணவரும் செல்வசுந்தரம் (சுவீடன்), இராஜகுலேந்திரன் (பிரான்ஸ்), ஜெயரத்தினம் (சுவீடன்), இராஜயோகம் (ஆசிரியை கிளிநொச்சி), மாலதி (ஆசிரியை பெரியதம்பனை) ஆகியோரின் அன்பு தந்தையும் சிவஞானம் (புகையிரத நிலைய அதிபர் கிளிநொச்சி),மாதவன் (ஆசிரியர்பெரிய தம்பனை], கிருஷ்ணமாலா, செல்வராணி ஆகியோரின் மாமனுருமாவார். இவ்வறிவித்தலை உற்ருர்,உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. பாலேந்திரன்

மஞ்சந்தோட்டம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

[சி-6187)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81